6. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். குழுவின் தலைவர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பது மற்றும் இருபது (பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவை) ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. உரிமை மீறல் பிரச்சினை

நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர்மீது—தீர்ப்பு

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் பிரச்சினை.

மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள், 9-4-2002 அன்று, 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, "1972-ல் அன்றைய முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள், காவிரிப் பிரச்சினை குறித்து, உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கைத் திரும்பப் பெற, இந்திரா காந்தி அம்மையாரிடம் தன் மீதுள்ள கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து ஊழல் ஆகிய இரு வழக்குகளையும், சர்க்காரியா கமிஷன் வழக்குகளையும் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பேரம் பேசி, காலில் விழுந்ததாக" தவறான தகவலை வேண்டுமென்றே கலைஞரின்மீது களங்கம் கற்பிக்கிற உள்நோக்கத்தோடு பேசியிருக்கிறார் என்று குறிப்பிட்டு, அவர்மீது திருவாளர்கள் துரைமுருகன், டாக்டர் க. பொன்முடி, இ. புகழேந்தி, எ.வ. வேலு, மீ.அ. வைதியலிங்கம், கு. பிச்சாண்டி, ஆர். சக்ரபாணி மற்றும் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள், 15-4-2002 ஆம் நாளிட்டு அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்புக் கொடுத்துள்ளனர்.

உறுப்பினர்களது உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பில், அமைச்சரின் உரையில் பிரச்சினைக்குரிய பகுதிகளைப் பேரவை விதி